Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.150/2019

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.செந்தில்குமார் | Occupation | EB |
| Father's name | ஆறுமுகம் | Calling | |
| Village | தெற்கு குப்பனாபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of May 2026.

18.05.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தெற்கு குப்பனாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் EB யில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 26.08.2018 அன்று கீழப்பட்டியில் கபடி போட்டி நடத்துவதற்கு எங்கள் குழுவை அழைத்தார்கள். நாங்கள் எங்கள் ஆடைகளை மாற்றிவிட்டு எங்களுக்கு சொந்தமான செல்போன்களை ஒரு பேக்கில் வைத்துவிட்டு Warmup செய்துகொண்டிருந்தோம். நாங்கள் பேக் வைத்திருந்த இடத்தில் இருநபர்கள் இருந்தனர். அதில் ஒரு நபர் எங்கள் பையில் வைத்திருந்த Asus கருப்பு நிற செல்போனை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். அவருடன் இருந்த மற்றொரு நபரை பிடித்து விசாரித்தபோது ஓடியவர் யார் என்று எங்களிடம் சொன்னார். ஆஜர் எதிரிதான் செல்போனை எடுத்துக்கொண்டு ஓடிய நபர் ஆவார். நாங்கள் அவரை பிடித்து எதிரியுடன் நான், முருகன், அய்யனார் ஆகியோர்கள் காவல்நிலையத்திற்கு சென்று சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்தோம். கோபாலகிருஷ்ணனை எனக்கு தெரியும். அவர் எனது தம்பி. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவிலுள்ள கையெழுத்து கோபாலகிருஷ்ணனுடையதுதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள செல்போன் தான் எதிரி எடுத்து சென்றதாகும். **மேற்படி புகைப்படத்திலுள்ள Asus கருப்பு**

**நிற செல்போன் சாபொ.I ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.150/2019

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முருகன் | Occupation | கூலி வேலை |
| Father's name | சண்முகவேல் | Calling | |
| Village | தெற்குகுப்பனாபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of May 2026.

18.05.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தெற்குகுப்பனாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். அவர் எனது அண்ணன். கடந்த 26.06.2018 அன்று கபடி மேட்ச் விளையாடுவதற்காக வேறு ஊருக்கு சென்றோம். காலை 06.00 மணியளவில் நாங்கள் சபடி மேட்ச் விளையாடிக்கொண்டிருந்தபோது எங்கள் பையில் வைத்திருந்த கோபாலகிருஷ்ணனுக்கு சொந்தமான செல்போனை யாரோ ஒருவர்திருடிவிட்டார். யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது. பின்னர்இது சம்மந்தமாக புகார் அளிக்க காவல்நிலையம் சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.